திரு. ஜி. கே. ஜெ. பாரதி: பேரவையின் தலைநாயகர் அவர்களே, நம்முடைய வரலாற்றுச் சிறப்புடைய பல்லவ நாட்டினுடைய சிறப்புடைய நாகரிகமாக இருக்கின்ற காஞ்சி மாநகரத்தில் ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயில் இருக்கின்றது. அந்த திருக்கோயிலுடைய, தமிழருடைய கலாச்சாரத்தையும், பண்பையும், நாகரீகத்தையும் விளக்குகின்ற வண்ணப் பூச்சுக்களையும் சுதைகளையும் இப்போது இருக்கிற நிர்வாகிகள் சுண்ணாம்பைப் பூசி அழித்துக் கொண்டு வருகிறார்கள்.

காஞ்சி மாநகரத்திலே இருக்கின்ற திருக்கோயில்களிலே அழகான திருக்கோயில் ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயி அந்தத் திருக்கோயில் ஐந்தாம் நூற்றாண்டிலே பல்லவர்கள் காலத்திலே கட்டப்பட்டது. அந்தத் திருக்கோயிலிலே வண்ணப் பூச்சுக்களும், வண்ணச் சுதைகளும் இருக்கின்றன. அவைகளை தற்போது இருக்கின்ற நிர்வாகிகள் அங்கே சுண்ணாம்பை வைத்து அழித்து நீக்கிவிட்டிருக்கிறார்கள். அதனால் அந்தப் பகுதியிலே இருக்கின்ற பல்வேறு பக்தர்கள் வரலாற்றுச் சிறப்புடைய தமிழருடைய நாகரீகத்தை, தமிழருடைய கலாச்சாரத்தை விளக்குகின்ற திருக்கோயிலைப் பாழாக்கலாமா என்று எண்ணுகிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில், தங்கள் மூலமாக அறநிலையத்துறை அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன். இதைப்போன்ற நிலைகள் தமிழகத்திலேயுள்ள கலாச்சார கோயில்களிலே நடைபெறுமானால், அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள்? இதைப் போன்ற சூழ்நிலைகளைத் தடுப்பதற்கு அரசு முன் வருமா என்றும் அறிய விரும்புகிறேன்

(முற்பகல் 11-10)

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'இண்டியன் எக்ஸ்பிரஸ்' மூலமாக இந்தத் தகவல் கிடைத்த உடனே சம்பந்தப்பட்ட அறநிலையத்துறை அதிகாரிகளுக்கு ஆணையிடப்பட்டு, அதை புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த மாதிரி தவறுகள் இனிமேல் நடக்காமல் இருப்பதற்கு கடுமையாக ஆணைகள் பிறப்பிக்கப் பட்டிருக்கின்றன.

(எ) திண்டுக்கல் நகராட்சியில் நடைபெற்ற பள்ளி திறப்பு விழாவிற்கு உறுப்பினரை அழைக்காதது.

திரு. ஆ. பிரேம்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் நகராட்சியில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் தலைவராக இருக்கிறார் 27—3—87-ஆம் தேதியன்று தன்னிறைவு திட்டத்தின் கீழ் அரசினால் கட்டப்பட்ட பள்ளியின் திறப்புவிழா அழைப்பிதழில் சட்டமன்ற உறுப்பினரின் பெயரைப் போடாமலும், அழைப்பிதழ் தராமலும், அவர்களாகவே திறந்திருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களின்

பெயரைப் போடவேண்டுமென்ற விதி இருந்தும், விதியினை மீறி இருக்கக்கூடிய அந்தத் தலைவர் மீது கடும் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

(ஏ) தகவல் கோருவதற்குப் பேரவைத் தலைவரின் முன் அனுமதி.

திரு. பொன் முத்துராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, ...(குறுக்கீடு)

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் தலைவர் அவர்களே, .. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த கவன ஈர்ப்பு (குறுக்கீடு) திரு. பொன் முத்துராமலிங்கம், நீங்கள் அனுமதி கேட்கவில்லை. திரு. அ. ரகுமான்கான், நீங்கள் அனுமதி கேட்டீர்களா? (குறுக்கீடு) அவர்கள் எல்லோரும் 9.30 மணிக்கே வந்து என்னிடம் அனுமதி கேட்டார்கள், வினா எழுப்பப் போகிறோம் என்று. நீங்கள் எதைப்பற்றி வினா எழுப்பப் போகிறீர்கள் என்று எனக்குத் தெரியாது. காலையில் சொல்லியிருப்பீர்களேயானால், நான் அனுமதித்து இருப்பேன். இன்று வந்து சொல்லுங்கள், நாளை காலை அனுமதிக்கிறேன், அமருங்கள்.

3. கவன ஈர்ப்பு.

(அ) மாதா பட்டணத்தில் பிற்பட்டோர் மாணவியருக்கான விடுதி துவங்க வேண்டியதன் அவசியம்.

*திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''அம்பாசமுத்திரம் வட்டம், மாதாபட்டணம் ச.ச.வி. மேல்நிலைப்பள்ளியில் பிற்படுத்தப்பட்ட மாணவியர் தங்கி கல்வி பயில, மாணவியர் விடுதி ஆரம்பிக்க வேண்டிய அவசியம் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் மாணவர்-மாணவியருக்காக பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையால் நடத்தப்படும் 557 விடுதிகளில், திருநெல்வேலி மாவட்டத்தில் (புதிதாகப் பிரிக்கப்பட்டுள்ள சிதம்பரனார் மாவட்டம் உட்பட) 48 விடுதிகள் இயங்கி வருகின்றன.

LEGISLATIVE ASSEMBLY